முதன்மை மாவட்ட நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.

OS. 391 /2021

2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5 ஆம் நாள் வா.த.சா 1-ன் வாக்குமூலம்

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)-ன் விதிமுறைகளின்படி முதன்மை மாவட்ட நீதிபதி திரு.எஸ்.ஜவகர், B.L., அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அலமேலு | வயது | : | 46 |
| தந்தை/கணவர் பெயர் | : | ரெங்கராமானுஜம் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

பிரதிவாதிதரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி - எனது மாமனார் பெயர் சீனிவாச பிள்ளை. அவர் விவசாய வேலை பார்த்தார். ஆடு, மாடுகள் வைத்திருந்தார். என் மாமனாருடன் கூட பிறந்தவர்கள் 2 பேர். ஒரு அக்கா, ஒரு தம்பி. அவர்கள் பெயர் தெரியாது. என் கணவரின் சித்தப்பா வெங்கடேசன் பிடிஓ வாக இருந்தார். என் கணவர்தான் எங்கள் குடும்பத்தில் படித்தவர். என் கணவருக்கு சித்தப்பா மூலமாகத்தான் வேலை கிடைத்தது என்றால் என் கணவரின் முயற்சியால் வேலை கிடைத்தது. என் கணவர் படித்தவர்என்பதாலும், பிரதிவாதி படிக்கவில்லை என்பதால் அவருக்கு வேலை வாங்கி கொடுத்தார் என்றால் சரியல்ல. பிரதிவாதி ஆடு மாடு மேய்த்தார் என்றால் சரியல்ல. சும்மாதான் இருந்தார். 2000 வருடம் எனக்கு திருமணம் ஆனது. என் மாமனார் சாலை

விபத்தில் இறந்து போனார். என் கணவர் படித்தவர் என்பதால் குடும்ப கணக்கு வழக்குகளை பார்த்து வந்தார். என் வீட்டுக்காரர் கணக்கு வழக்கைதான் என் கணவர் பார்த்து வந்தார். பொதுகுடும்பத்தில் வருமானமே இல்லை. என் கணவர் குடும்பத்திற்கு நிலத்திலிருந்தும், ஆடு, மாடு மூலமாகவும் வருமானம் வந்தது என்றால் சரிதான். என் மாமனார் இறந்ததற்கு இழப்பீடு தொகை வந்தது. அந்த இழப்பீடு தொகையை என் கணவர்தான் வாங்கினார் என்றால் சரிதான். அதை அவர் தங்கை திருமணத்திற்கு செலவு செய்தார். யார் யாருக்கு எவ்வளவு இழப்பீடு கொடுக்கப்பட்டது என்று தெரியாது. தாவா சொத்தில் என் மாமனார் இறப்பதற்கு முன்பே பாதி வீடு கட்டப்பட்டிருந்தது என்றால் சரியல்ல. என் மாமனார் 1990 ல் இறந்து போனார். ஏற்கனவே பாதி வீடு கட்டப்பட்டிருந்தது என்றாலும், இழப்பீடு தொகையை வைத்து மீதி வீடு கட்டப்பட்டது என்றால் சரியல்ல. வன்னியர்பாளையத்தில் 33/4 சி என்ற இலக்கத்தில் என்பேரில் ஒரு வீடு உள்ளது என்றால் சரிதான். அந்த வீடு 2002 ல் வாங்கப்பட்டது. வாங்கும்போதே குடியிருக்கும் வீடாகத்தான் வாங்கப்பட்டது. அந்த வீட்டில் நான் குடியிருக்கவில்லை. அந்த வீடு வாடகைக்கு விடப்பட்டுள்ளது. பிரமாண வாக்குமூலத்தில் அந்த வீட்டில் வசித்து வருவதாக கூறியிருக்கிறேன் என்றால் சரிதான். அந்த வீடு வாங்க சீதனமாக என் அப்பா வாங்கி கொடுத்தார். அந்த வீடு வாங்குவதற்கு பிரதிவாதி ஓ.டியில் ஒரு லட்சம் பணம் வாங்கி கொடுத்தார் என்றாலும், போக்கிய பணம் ரூ.40,000/- கொடுத்தார் என்றாலும் சரியல்ல. என் கணவர் அரசுப்பணியில் இருந்ததால் என்பேரில் அந்த வீடு வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. என் கணவர் வீடு வாங்கும்போது பிரதிவாதி கொடுத்த பணத்திற்கு ஈடாக

பங்குபாகம் தருவதாக கூறினார் என்றால் சரியல்ல. ஒரு லட்சம் பணத்தையும் நாங்கள் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. நாங்கள் எந்த பணமும் வாங்கவில்லை. பிரதிவாதி பணத்தை யும் கொடுத்து, பொது குடும்ப சொத்தில் வீடு வாங்கியதால் பிரதிவாதிக்கும் உரிமை உண்டு என்றால் சரியல்ல. பிரதிவாதி அவர் திருமணத்திற்கு வந்த 56 கிராம் நகைகளை கொடுத்து தாலிசரடு செய்ய சொன்னார் என்றால் சரியல்ல. இதுவரை தாலிசரடு செய்த கொடுக்கவில்லை என்றாலும் பணத்தை திருப்பி கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. என் மாமியாருக்கு சொந்தமான நகைகளை என் கணவர்தான் எடுத்துக்கொண்டார் என்றால் சரியல்ல. நிலத்திலிருந்து வரும் போக்கிய பணத்தை என் கணவர் வாங்கவில்லை. வன்னியர்பாளையத்தில் உள்ள வீடு எங்களுக்கு என்றும், கிராமத்தில் உள்ள வீடு பிரதிவாதிக்கும் என்று பிரித்துக்கொண்டோம் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் வீட்டுவரி, மின்வரி ஆகியவற்றை பிரதிவாதிதான் கட்டி வருகிறார் என்றால் சரியல்ல. வீட்டுவரி ரசீதுகள் வழக்கிற்கு பின்னிட்டு கட்டிவரும் ரசீது என்றால் சரியல்ல. என் கணவர் ஊரகத்துறையில் வேலை செய்வதால் மிரட்டி இந்த ரசீதுகளை வாங்கி விட்டார் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் நாங்கள் குடியிருக்கவில்லை என்றாலும், கூட்டு அனுபவத்தில் இல்லை என்றாலும் சரியல்ல. அதனால் நாங்கள் கட்டியுள்ள நீதிமன்ற கட்டணம் தவறு என்றால் சரியல்ல. வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. 2009 ல் குடும்பத்தில் பாகப்பிரிவினை நடக்கவில்லை. வழக்கு சொத்தில் என் கணவர் பேரில் கூட்டாக பட்டா கொடுததிருந்தாலும் பிரதிவாதிதான் அனுபவித்து வருகிறார் என்பதால் அவருக்குதான் சொந்தம் என்றால் சரிய்லல. நான்

வழக்கு சொத்து பக்கமே வரவில்லை என்றாலும் பிள்ளைகளை கடலூரில் படிக்கவைக்கிறேன் என்றாலும் சரியல்ல. என் கணவரின் கூடபிறந்தவர்கள் எல்லோரையும் தரப்பினராக சேர்க்காததால் வழக்கு தள்ளுபடி அருகதையானது என்றால் சரியல்ல. என் கணவரை பிரதிவாதிதாக்கி மூளையில் பிரச்சனை ஏற்பட்டது சம்மந்தமாக புகார் கொடுக்கவில்லை. பிரதிவாதி அவ்வாறு செய்யவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. வாதியை வீட்டிற்குள் அனுமதிக்கவில்லை என்று புகார் கொடுத்த நகலை தாக்கல் செய்யவில்லை. புகார் கொடுத்ததாக வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து மாமனாரின் இழப்பீட தொகையை வைத்து கட்டடப்பட்டது என்றாலும், பொதுகுடும்ப வருமானத்தை வைத்து கட்டடப்பட்டது என்றாலும் என் கணவரின் வருமானத்தில் கட்டடப்படவில்லை என்றால் சரியல்ல. எங்களுடைய எவர்சில்வர் சாமான்கள், ஆடு, மாடு ஆகியவைகளை பிரதிவாதி அபகரித்து கொள்ளவில்லை என்றாலும் சரியல்ல. தகவல் ஆணையத்தில் மேல் முறையீடு நான் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அது என் கணவர் கொடுத்தது என்றாலும், அதுபற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்தில் அனுபவம் இல்லாததாலும், போதுமான தரப்பினரை சேர்க்காததாலும், நீதிமன்ற கட்டணம் சரியாக கட்டாததாலும் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. ஏற்கனவே என் கணவர் தாவா சொத்து பிரதிவாதிக்குதான் சொந்தம் என்று ஒப்புக்கொண்டு கையெழுத்து போட்டுள்ளார் என்றாலும், அதனால் இந்த பாகவழக்கு செல்லாது என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.